'மாற்றம்' என்று சொல்லி ஆட்சிக்கு வந்த

ரீல்ஸ் தி.வெ.க. ஆட்சியில் சந்தி சிரிக்கும் சட்டம் - ஒழுங்கு!

நாள்தோறும் தொடரும் கொலைகள் – மக்கள் அச்சம்!

மதுரை, அக். 28 -

மதுரை மாவட்டம், மேலூர் அருகே தனியாமங்கலத்தை சேர்ந்த பெரியகருப்பன் சத்தியா ஆகியோரின் மகன் முத்துச்செல்வம் (7), வெள்ளலூரில் உள்ள தனியார் பள்ளியில் 3ம் வகுப்பு படித்து வந்தான். தந்தை வெளிநாட்டில் வேலை செய்வதால், 2 மகள்கள், மகனுடன் சத்தியா வசித்து வந்தார். நேற்று முன்தினம் பள்ளி விடுமுறை என்பதால், மதியம் நண்பர்களுடன் விளையாட செல்வதாக கூறி சென்றார்.

ஆனால் முத்துச்செல்வம் இரவாகியும் திரும்பவில்லை. இதையடுத்து, கீழவளவு காவல் நிலையத்தில் சத்தியா புகார் அளித்தார். நேற்று காலை வரை போலீசார் சிறுவனை தேடினர்.

அப்போது தனியாமங்கலத்தில் சத்தியாவின் வீட்டின் அருகே ஒரு பாழடைந்த ஓட்டு வீட்டிற்குள் முத்துச்செல்வம் சடலமாக கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடலில் ஆங்காங்கே காயங்களும், கழுத்து பகுதியில் கயிறு இறுக்கியதற்கான தழும்பும், கண்ணிற்கு கீழே கருப்பு நிறமையும் இருந்துள்ளது. நேற்று முன்தினம் பவுர்ணமி நாள் என்பதால் யாராவது நரபலி கொடுக்கும் நோக்கத்தில் கொலை செய்திருக்கலாமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சிறுவனின் உறவினர்கள் கூறுகையில், சிறுவனை நரபலி கொடுத்திருக்கலாம், போலீசார் இதை மறைக்க முயல்கின்றனர். போலீசார் முதலிலேயே தேடியிருந்தால் உயிருடன் மீட்டிருக்கலாம். இதில் உரிய தீர்வு கிடைக்கும் வரை உடலை வாங்க மாட்டோம் என்றனர்.

இளம்பெண் மீது சாணத்தை ஊற்றி தாக்குதல்;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, புதிய மார்க்கெட் தெரு கணேசபுரம் பகுதியைச் சேர்ந்தவர் அபிநயா (23). இன்ஸ்டா பிரபலமாக உள்ளார். இவரது கணவர் கவியரசனுடன், காரைக்குடியை சேர்ந்த தொழிலதிபரின் 20 வயது மகள் இன்ஸ்டாகிராமில் பேசி பழகி வந்ததாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அப்பெண்ணை, அபிநயா, செல்போனில் அழைத்து திட்டியுள்ளார். கடந்த 21ம் தேதி காரைக்குடியில் உள்ள தனியார் உணவகத்திற்கு அப்பெண் மற்றும் அவரது தோழி சாப்பிடச் சென்றனர். அப்போது அங்கு வந்த அபிநயா, அவரது சகோதரி அருணா தேவி (27) மற்றும் அவர்களது தோழி பிரியா (30) ஆகியோர், தொழிலதிபரின் மகளை வழிமறித்து அவதூறாக பேசி திட்டியதுடன், நடுரோட்டில் வைத்து துடைப்பத்தால் சரமாரியாக தாக்கினர். மேலும் ஒரு குடத்தில் கரைத்து வைத்திருந்த மாட்டுச்சாணத்தை அப்பெண்ணின் தலையில் ஊற்றினர். இது குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அருணாதேவி த.வெ.க. காரைக்குடி மாநகர இளைஞரணியில் முக்கிய பொறுப்பில் உள்ளதே காரணம் என கூறப்படுகிறது. அமைச்சர் உள்ளிட்ட மேலிட செல்வாக்கை பயன்படுத்தி, அருணாதேவி கைதில் இருந்து தப்பித்து வருவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. மாற்றம் தருவதாக சொல்லி ஆட்சிக்கு வந்த த.வெ.க. அரசு, தவறு செய்யும் தனது நிர்வாகி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் பாதுகாப்பது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

ஸ்ரீவைகுண்டம், சேலத்தில் பயங்கரம்!

ஸ்ரீவைகுண்டம், சேலத்தில் கல்லூரி மாணவர், ரவுடி வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே ஆழ்வார்கற்குளத்தைச் சேர்ந்தவர் மாரியப்பன். இவரது குடும்பத்தினருக்கும், இதே ஊரைச் சேர்ந்த சுந்தர்ராஜன் குடும்பத்தினருக்கும் வீட்டின் முன்பாக கழிவுநீர் ஓடுவது தொடர்பாக முன்விரோதம் இருந்து வந்தது.

அப்போது, மாரியப்பன் தரப்பிற்கும், சுந்தர்ராஜன் தரப்பிற்கும் தகராறு ஏற்பட்டு வாக்குவாதம் ஆனது. ஆத்திரமடைந்த இருதரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் கத்தி மற்றும் வாள் போன்ற ஆயுதங்களால் சரமாரி தாக்கிக் கொண்டனர்.

இதில் மாரியப்பன் மகனான ஸ்ரீவைகுண்டம் பகுதியில் உள்ள கல்லூரியில் பிஏ 2ம் ஆண்டு படித்து வந்த இசக்கிராஜா (20) பலத்த வெட்டுக் காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். எதிர்தரப்பை சேர்ந்த சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் படுகாயமடைந்தனர்.

ஓட ஓட வெட்டி ரவுடி கொலை: சேலம் ஜங்ஷன் ஸ்டேட் பேங்க் காலனியை சேர்ந்தவர் பிரபல ரவுடி டேவிட் உதயகுமார் (40). இவர் மகேஸ்வரி என்ற பெண்ணிடம் வீட்டோடு நிலம் வாங்கி தருவதாக கூறி ரூ.65 லட்சத்தை வாங்கினார்.

ஆனால் அந்த நிலம் அவரது தோழியான சரண்யா பெயரில் இருக்கிறது. அதனை மறைத்து மகேஸ்வரிக்கு நிலம் வாங்கி தருவதாக கூறி மோசடி செய்துள்ளதாக மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிந்து இருவரையும் தேடி வந்த நிலையில் கோர்ட்டில் முன்ஜாமீன் பெற்று காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டு வந்தார். நேற்று காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு காலை 11 மணியளவில் ஜங்ஷனில் இருந்து மேம்பாலம் பகுதியில் டூவீலரில் டேவிட் உதயகுமார் சென்று கொண்டிருந்தார்.

பின்னால் 3 டூவீலர்களில் வந்த 5 பேர் கொண்ட கும்பல் திடீரென அவரது டூவீலரை வழிமறித்து நிறுத்தி அவரை அரிவாளால் வெட்டியது. உடனே அவர் டூவீலரை போட்டு விட்டு மேம்பாலத்தில் இருந்து கீழ் பகுதியில் இறங்கி ஓடினார். ஆனால் விடாமல் விரட்டி சென்ற கும்பல் பல்வேறு ஆயுதங்களால் சரமாரியாக வெட்டினர். இதில் டேவிட் உதயகுமார் அங்கேயே துடிதுடித்து உயிரிழந்தார். பின்னர் கும்பல் தப்பியது.

தூத்துக்குடியில் ஒரே வாரத்தில் 6 கொலைகள்!

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் 6 படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. குலசை தசரா விழாவில் அக்.21ம் தேதி பாலியல் சில்மிஷ விவகாரத்தில் வேல்முருகன் என்ற வாலிபர் படுகொலை செய்யப்பட்டார். மறுநாள் இரவில் சாத்தான்குளம் அருகே பன்னம்பாறையில் விவசாயி கொம்பையா கல்லால் அடித்து கொலை செய்யப்பட்டார். 23ம் தேதி அதிகாலையில் முதலூரில் சிறுமி மீதான காதல் விவகாரத்தில் மேரி ரெஜிலா என்ற பெண் கொலை செய்யப்பட்டார்.

அதேநாள் இரவு நாசரேத் அருகே மது அருந்தும்போது ஏற்பட்ட தகராறில் சாமுவேல் என்பவரை அவரது சகோதரர் இஸ்ரவேல் அடித்துக் கொன்றார். கிராம மக்களால் 23ம் தேதி தாக்கப்பட்ட ஏரல் ரவுடி தனுஷ்கோடி நேற்று முன்தினம் உயிரிழந்தார். நேற்று முன்தினம் ஆழ்வார்கற்குளத்தில் கல்லூரி மாணவர் இசக்கிராஜா வெட்டி படுகொலை செய்யப்பட்டு உள்ளார். அடுத்தடுத்து நடக்கும் கொலை சம்பவங்களால் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி உள்ளதாகக் கூறி கிராம மக்கள் அச்சமும், கவலையும் தெரிவித்துள்ளனர்.

காதலியை வெட்டிக்கொன்ற காதலன் தற்கொலை

திருப்பத்தூர் மாவட்டம் சின்ன வேப்பம்பட்டு பகுதியை சேர்ந்த வர் மணியரசு மகன் பிரதீப் (25). திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே பொன்னேரியை சேர்ந்தவர் ஆறுமுகம் மகள் திவிஜாஸ்ரீ (20), கல்லூரி காதலர்களான இருவரும் படிப்பை முடித்து விட்டு, ஒரே நிறுவனங்களில் பணியாற்றி வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, ஓசூர் அருகே ஜீமங்கலத்தில், பிரதீப் தான் தங்கியிருந்த அறைக்கு திவிஜாஸ்ரீயை அழைத்து சென்றுள்ளார். அங்கு அவர்களுக்குள் காதல் விவகாரத்தில் தகராறு ஏற்பட்டதாக தெரிகிறது. ஆத்திரமடைந்த பிரதீப், திவிஜாஸ்ரீயை அரிவாளால் சரமாரியாக வெட்டியுள்ளார். இதில் ரத்தவெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார். சிறிது நேரத்தில் ஓசூர்பாகலூர் சாலைக்கு ஓடிய பிரதீப், அவ்வழியாக வந்த லாரி யில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

மாயமான பெண் குழந்தை கொலை?

ராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி அருகே ஆக்கிடவலசை கிராமத்தை சேர்ந்தவர் ராஜசேகரன் (35). இவரது மனைவி இந்துஜா (23). மகள் பார்கவி (2). இந்துஜா 2வது குழந்தை பெற்று 18 நாட்களான நிலையில், அருகில் உள்ள அகஸ்தியர்கூடம் கிராமத்தில் உள்ள தந்தை வீட்டில் தங்கியிருந்தார். நேற்று முன்தினம் இரவு மனைவி, குழந்தைகளை பார்ப்பதற்காக ராஜசேகரன், மாமனார் வீட்டிற்கு வந்தார். அங்கு தம்பதியினரிடையே தகராறு ஏற்பட்டது.

இதனால் ராஜசேகரன் கோபித்துக் கொண்டு ஆக்கிடவலசைக்கு சென்று விட்டார். இதனை தொடர்ந்து ராஜசேகரனை சமாதானப்படுத்த இந்துஜா, அவரது தாயார் ஆக்கிடவலசைக்கு சென்றனர். திரும்பி வந்து பார்த்தபோது, வீட்டில் தூங்கிய குழந்தை பார்கவியை காணவில்லை. அருகில் உள்ள இடங்களில் தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. நேற்று காலை வீட்டின் அருகே உள்ள வாழ இருளாகி அம்மன் கோயில் ஊரணியில் குழந்தை இறந்த நிலையில் மிதந்து கிடந்தது.

தினமும் கொலை - கொள்ளை - பலாத்காரம் - சிறுவர்கள் மாயம்!

திரைப்படங்களை மிஞ்சும் அளவிற்கு குற்றங்கள் - எங்கே செல்கிறது தமிழ்நாடு!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, அக். 28 -


தினமும் கொலை - கொள்ளை -பலாத்காரம் - சிறுவர்கள் மாயம் என திரைப்படங்களை மிஞ்சும் அளவிற்கு குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. எங்கே செல்கிறது தமிழ்நாடு என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்து 27.10.2026 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் த.வெ.க.வின் ஆறு மாத ஆட்சியில் கொலை, பாலியல் பலாத்காரம் அதிகரித்து வந்த நிலையில் இந்த மாதத்தில் சிறுவர்கள் மாயமாகி இருப்பது பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மத்தியில் பயத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு தமிழகத்தில் மீண்டும் விவாதப் பொருளாகியுள்ளது. தேர்தல் பிரசாரத்தில் குழந்தைகளுடன் நெருக்கம் காட்டிய விஜய்யின் அரசியல் பிம்பம் வெறும் வாக்குக்காகவா என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பி வருகின்றன.

கடந்த நான்கு மாதமாக பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்டதாக தொடர் செய்திகள் வெளியான சூழலில், தற்போது குழந்தைகள் மாயமாகி வருகின்றனர். விழுப்புரம் மாவட்டம், செஞ்சியை அடுத்த ஆலம்பூண்டியைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஹேமலதா கடந்த 12ம் தேதி அதிகாலை காணாமல் போனார்.

தற்போது வரை அவர் கிடைக்கவில்லை. ராணிப்பேட்டை மாவட்டம், லாலாபேட்டை பகுதியில் சாலையோரத்தில் பெற்றோருடன் வசித்து வந்த ஒரு வயது பெண் குழந்தையும் காணாமல் போயிருக்கிறார். அதேபோல, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தை அடுத்த குரும்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அஸ்வின் என்பவரும் கடந்த 2 தினங்களுக்கு முன் காணாமல் போயிருக்கிறார்.


தினகரன்
அக்டோபர் 27, 2026 செவ்வாய்க்கிழமை
எங்கே செல்கிறது தமிழ்நாடு

தமிழ்நாட்டில் தவெக தலைமையில் ஆறு மாத ஆட்சியில் கொலை, பாலியல் பலாத்காரம் அதிகரித்து வந்த நிலையில் இந்த மாதத்தில் சிறுவர்கள் மாயமாகி இருப்பது பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மத்தியில் பயத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பு தமிழகத்தில் மீண்டும் விவாதப் பொருளாகியுள்ளது. தேர்தல் பிரசாரத்தில் குழந்தைகளுடன் நெருக்கம் காட்டிய விஜய்யின் அரசியல் பிம்பம் வெறும் வாக்குக்காகவா என எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பி வருகின்றன.
கடந்த நான்கு மாதமாக பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்டதாக தொடர் செய்திகள் வெளியான சூழலில், தற்போது குழந்தைகள் மாயமாகி வருகின்றனர். விழுப்புரம் மாவட்டம், செஞ்சியை அடுத்த ஆலம்பூண்டியை சேர்ந்த 7 வயது சிறுமி ஹேமலதா கடந்த 12ம் தேதி அதிகாலை காணாமல் போனார்.

கோவையில் சாதிய பாகுபாடு காரணமாக மாணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் இன்னும் இந்த சாதிய சமூகத்தின் அவல நிலையை எடுத்துரைக்கிறது. அதோடு மட்டுமின்றி, சாத்தான்குளத்தில் காதல் விவகாரத்தில் தாயை வெட்டிக் கொன்றுவிட்டு, இரண்டு பெண் குழந்தைகளை கடத்தி சென்று கட்டி வைத்திருந்த சம்பவம் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும், வேளாங்கண்ணிக்கு சென்ற 2 சிறுமிகள், சாப்பாட்டுக்கு காசு கேட்ட தற்காக அவர்களை விடுதியில் அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமை செய்ததாக வெளியாகியுள்ள தகவலும் தமிழகத்தை புரட்டி போட்டிருக்கிறது.

குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை சம்பவங்களும், கடத்தல் நிகழ்வுகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. காவல்துறையை கையில் வைத்திருக்கும் விஜய், வாயே திறக்கவில்லை. செஞ்சியில் காணாமல் போன சிறுமி பற்றி, 15 நாட்களை கடந்த பிறகும் எந்தவிதமான தகவலும் தெரியவில்லை. இதுகுறித்து காவல் உயரதிகாரிகள்மட்டத்திலான ஆலோசனைக் கூட்டத்தை விஜய் அரசு நடத்தவில்லை. இதற்கான கடுமையான உத்தரவுகளும் பிறப்பிக்கவில்லை. இதனால் சட்டம் ஒழுங்கு பிரச்னை பற்றி தமிழ்நாடு அரசு கவலை கொண்டதாக தெரியவில்லை.

இந்நிலையில் ஹாரர் படங்களை மிஞ்சும் அளவுக்கு குற்றங்கள் நடந்து வருகின்றன என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டி உள்ளார்.

மதுரையில் மாயமான சிறுவன் சடலமாக மீட்பு, காணாமல் போன செஞ்சி சிறுமி எங்கே எனத்தெரியவில்லை. இன்று எத்தனை கொலைகள் என எண்ணக்கூடிய கொடிய நிலையில் தமிழ்நாடு இருக்கிறது. வீடியோ கேம்கள், ஹாரர் திரைப்படங்களை மிஞ்சும் அளவுக்கு தமிழ்நாட்டில் குற்றங்கள் பெருகி வருகின்றன. தி.வெ.க. ஆட்சியில் குற்றவாளிகள் அச்சமின்றி குற்றங்களை செய்கிறார்கள் என தமிழ்நாடு அரசுக்கு அவர் சரமாரி கேள்விகளை எழுப்பியுள்ளார். தினமும் கொலை, கொள்ளை, பலாத்காரம், சிறுவர்கள் மாயம் உள்பட பல்வேறு குற்றங்களால் தமிழ்நாடு எங்கே செல்கிறது என்ற கேள்வி தமிழர்கள் ஒவ்வொருவரின் மனதிலும் எழுந்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; ஒரு அமைச்சர் மற்ற அமைச்சர்களின் துறைகளில் கூட மூக்கை நுழைத்து 'ஆட்டைய' போடறதா ஒரு பேப்பர்ல படிச்சேன். உண்மையாவா இருக்கும்!

பட்டணம் : **ஆமாமய்யா; நான் கூட படிச்சேன். முதல்வர் துறைகளைக் கூட அவர் விட்டு வைக்கலைன்னும் படிச்சேன். உண்மையான்னு தெரியலை. மேலிடம் இதை கவனிச்சா சரி. இல்லைன்னா அவங்க சம்மதம் கூட இருக்குமோன்னு நினைக்கத் தோணும்!**